வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திருமதி. எஸ் மணிமொழி

ந.க.எண்: 206 /ஆ1/2024 நாள் : 05.06.2024

பொருள் : பார்வை வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி – பள்ளிக் கல்வித்துறை –மாவட்ட சுற்றுசூழல் /தேசிய பசுமைப்படை 5 சூன் 2024 உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் பள்ளி /கல்வி அலுவலக வளாகங்களில் தூய்மை பராமரித்தல் – தொடர்பாக

பார்வை : சென்னை மாநிலத்திட்ட இயக்குநர் பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககத்தின் இயக்குநர் ஆகியோர்களின் இணை செயல்முறைகள் R.C.No.1617/B8/Eco Club/SS/2024 dated: 31.05.2024

---

பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு வேலூர் மாவட்டத்தில் 2024–2025 ஆம் கல்வி ஆண்டில் 05.06.2024 அன்று உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு ஆசிரியர்கள்/மாணவர்கள்/பொதுமக்கள் ஆகியோர்ளுக்கு சுற்றுச் சூழல் மற்றும் மனித வளத்தினை பாதுகாக்கும் வகையில் பேரணி நடத்துதல், மரக்கன்றுகள் நடுதல், பள்ளி/அலுவலக வளாகத்தினை தூய்மை பராமரித்தல் (மக்கும், மக்காத குப்பைகளுக்கான தொட்டிகள் வைத்தல்) போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் பிற துறைகள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் தன்னார்வலர்கள் ஆகியோர்களுடன் இணைந்து உலக சுற்றுச்சூழல் தினத்தினை 05.06.2024 முதல் 14.06.2024 வரை கொண்டாடப்பட உள்ளது எனவே, உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு 05.06.2024 முதல் 14.06.2024 வரையில் ஒவ்வொரு நாளும் பள்ளி வேலை நாளன்று அனைத்துப் பள்ளி தலைமையாசிரியர்கள் /முதல்வர்களும், பங்கேற்கும் வகையில் நடத்தப்பட வேண்டும். கீழ்க்கண்ட தலைப்பின்படி ஆசிரியர்கள்/மாணவர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும்

நாள் 1 : Adopt Healthy Lifestyles (பள்ளிக்கு அருகில் / பள்ளி வளாகத்தில் களப்பயணம் / மரக்கன்று நடுதல் உட்பட பிற செயல்பாடுகள்)

நாள் 2: Adopt Sustainable Food Systems (Creation of Kitchen Garden. Organic Manure Preparationசார்ந்த விழிப்புணர்வு)

நாள் 3: Reduce E–Waste (மின் கழிவுகளை அகற்றுதல் / மீண்டும் பயன்படுத்துதல் சார்ந்த விழிப்புணர்வு

நாள் 4 : Reduce Waste (மக்கும் குப்பை/மக்காத குப்பைதரம் பிரித்தல் / மறு சுழற்சி சார்ந்த விழிப்புணர்வு)

நாள் 5: Save Energy (மின் கசிவு ஏற்படாமல் மின் சாதன பொருட்களைப் பயன்படுத்துதல், மின்னாற்றல் சேமித்தல் சூரிய மின்சாரம் பயன்பாடு சார்ந்த விழிப்புணர்வு)

நாள் 6 : Save Water (நீர் கசிவு ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளுதல் மற்றும் சிக்கனமாக நீரைப் பயன்படுத்துதல் சார்ந்த விழிப்புணர்வு)

நாள் 7: Say No to Single Use Plastic (ஒருமுறை பயன்படுத்தக்கூடிய நெகிழியை சேகரித்தல், பிளாஸ்டிக் வாட்டர் பாட்டில் மறுசுழற்சி சார்ந்த விழிப்புணர்வு)

அனைத்துப் பள்ளிகளும் ஒவ்வொரு நாள் நடைபெறும் நிகழ்ச்சியினை https://merilife.nic.in/ministry/signup என்ற இணையதளத்தில் தங்கள் பள்ளியின் சார்பில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்

**பதிவு செய்யும் முறை**

https://merilife.nic.in/ministry/signup --> Portal --> signup > Field offices signup (in the screen) --> State Government Affiliated --> State --> Select Department -> Select Institution (Others) --> Name of the Field Office (BRC/School Name) --> Name (BRC Supervisor Name/National Green Corp or Eco Club or Youth and Eco Club Teacher Coordinator) -->Designation (BRC Supervisor Name / National Green Corp or Eco Club or Youth and Eco Club Teacher Coordinator) -> E.Mail (Block or School Email) --> Enter Mobile No. --> Enter signup --> Enter OTP --> Select Field Offices --> Enter Mobile No. -> Enter OTP --> Proceed -->click New Action Report > Fill the Action Report Fom > Submit

அனைத்து பள்ளிகள் /கல்வி அலுவலகங்களில் இணைப்பில் உள்ள பள்ளித் தூய்மை உறுதிமொழியினை 05.06.2024 முதல் 14.06.2024 வரை தொடர்ந்து எடுக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் : சிறந்த செயல்பாடுகளின் புகைப்படங்கள் மற்றும் உறுதிமொழியினை அனைவரும் பார்க்கும் வண்ணம் தகவல் பலகையில் வைக்கப்பட வேண்டும்.

எனவே. அனைத்து வகைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் /முதல்வர்களுக்கு உரிய வழியில் தகவல் தெரிவித்து உடன் நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள அனைத்து கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : பள்ளித் தூய்மை உறுதிமொழி

பெறுநர்: அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

06/06

நகல்,
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி/ தொடக்க க்கல்வி/ தனியார் பள்ளிகள்)
மாவட்டக் கல்வி அலுவலகம்,
வேலூர்.